بسم الله الرحمن الرحيم     نحمده ونصلي على رسوله الكريم     وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 46

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

16 ரபீவுல் அவ்வல் 1441 ஹிஜ்ரி கமரி 14 நுபுவ்வத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
14 நவம்பர் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

يَآ أَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ
تُطِيْعُوا الَّذِيْنَ كَفَرُوْا
يَرُدُّوْكُمْ عَلٰٓى أَعْقَابِكُمْ
فَتَنْقَلِبُوْا خٰسِرِيْنَ

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நிராகரிப்பவர்களைப் பின்பற்றினால் அவர்கள் உங்களை உங்கள் குதிகால்களில் திருப்பி விடுவார்கள். இதனால் நீங்கள் இழப்பிற்கு ஆளாவீர்கள். (3:150)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எனது எல்லா நேரமும், ஒவ்வொரு நொடியும், எனது நண்பர்களுக்கு அனைத்து விதத்திலும் சுகமும், இன்பதும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், கவலையிலும்தான் நான் இருக்கின்றேன் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். இந்த அனுதாபமானது, எவ்வாறு ஒரு தாய் தனது குழந்தைகளில் ஒவ்வொருவருக்கும் சுகமும் வசதியும் கிடைக்க வேண்டும் என்ற கவலையில் மூழ்கி இருக்கின்றாரோ அதுபோன்றே எனது நிலையும் இருக்கின்றது. அந்த குழந்தைகள் எத்தனை பேர் இருந்தாலும் சரியே. முற்றிலும் அந்த தாயைப் போன்றே இறைவனுக்காக உள்ளத்தில் நமது நண்பர்களுக்காக உருக்கத்தையும் துக்கத்தை பகிர்ந்து கொள்வதையும் நான் உணர்கின்றேன்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உண்மையான விஷயம் என்னவென்றால், நமது நண்பர்களுடன் எனது தொடர்பானது உடல் உறுப்புகளைப் போன்றதாகும். இது நமது அன்றாட அனுபவத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஒரு சிறிய உறுப்பாக இருந்தாலும், உதாரணமாக, விரலில் வலி ஏற்பட்டாலும் அதனால் முழு உடலும் நிம்மதியற்றதாக ஆகி விடுகின்றது.

அவ்வாறே எனது எல்லா நேரமும், ஒவ்வொரு நொடியும், எனது நண்பர்களுக்கு அனைத்து விதத்திலும் சுகமும், இன்பமும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், கவலையிலும்தான் நான் இருக்கின்றேன் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

இந்த அனுதாபமானது, எவ்வாறு ஒரு தாய் தனது குழந்தைகளில் ஒவ்வொருவருக்கும் சுகமும் வசதியும் கிடைக்க வேண்டும் என்ற கவலையில் மூழ்கி இருக்கின்றார்களோ அதுபோன்றே எனது நிலையும் இருக்கின்றது. அந்த குழந்தைகள் எத்தனை பேர் இருந்தாலும் சரியே. முற்றிலும் அந்த தாயைப் போன்றே இறைவனுக்காக உள்ளத்தில் நமது நண்பர்களுக்காக உருக்கத்தையும் துக்கத்தைப் பகிர்ந்து கொள்வதையும் நான் உணர்கின்றேன்.

இத்தகைய அனுதாப உணர்வு சில நேரங்களில் வலுக்கட்டாயமாக என்னிடம் ஏற்படுகின்றது. அதாவது நமது நண்பர்களில் எவராவது ஒருவரது கடிதம் எனக்கு வரும் போது அதில் அவருக்கு ஏற்படுகின்ற ஏதாவதொரு வகையிலான துன்பம் அல்லது நோய் பற்றிய நிலைமைகளை விளக்குகின்ற வகையில் அது இருக்கின்றது. அதைப் படித்துப் பார்க்கும் போது நமது இயல்பில் ஒரு நிம்மதியற்ற பதற்றமான நிலைமை உருவாகின்றது.

ஒரு துக்கம் நமக்கு ஏற்படுகின்றது. இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக அதே அளவில் இந்த துக்கமும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இது போன்ற எந்த வகையிலான கவலையும் துக்கமும் இல்லாத எந்தவொரு நேரமும் இருப்பதில்லை. ஏனென்றால், இந்த அளவு அதிகமான எண்ணிக்கையில் நமது சகோதரர்கள் இருப்பதன் காரணமாக அவர்களில் ஒருவர் அல்லது மற்றவருக்கு ஏதாவதொரு துக்கம் அல்லது துயரம் ஏற்பட்டு விடுகின்றது. அது பற்றிய தகவல் கிடைத்ததும் உள்ளத்தில் ஒரு பதற்றமும், நிம்மதியற்ற நிலையும் உருவாகி விடுகின்றது. எந்த அளவுக்கு அதிகமாக நேரங்கள் இந்த துக்கத்தில் கழிகின்றன என்பதை என்னால் கூற முடியாது. ஏனென்றால், அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும் அத்தகைய துன்பங்களிலிருந்தும் கவலைகளிலிருந்தும் நமக்கு இரட்சிப்பை வழங்க முடியாது.

எனவே நான் எப்போதும் துஆக்கள் செய்வதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றேன். இறைவன் எனது நண்பர்களை எல்லா விதமான துக்கங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதே எல்லாவற்றையும் விட முதன்மையான துஆவாக இருக்கின்றது. ஏனென்றால், அவர்களைப் பற்றிய கவலையும் துக்கமும்தான் என்னைத் துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்தி விடுகின்றது. பிறகு ஒட்டுமொத்தமாகவும் அவர்களுக்காக துஆ செய்யும் நிலை உருவாகின்றது.

அதாவது அவர்களில் எவருக்காவது எந்தவொரு துக்கமும் துயரமும் ஏற்பட்டாலும் அல்லாஹ் அதிலிருந்து அவர்களுக்கு இரட்சிப்பை வழங்க வேண்டும் என்று துஆ செய்யப்படுகின்றது. எனது முழு பணியும், முழு உணர்வும் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்வதற்காகவே இருக்கின்றது. துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது தொடர்பான பெரும் பெரும் நம்பிக்கையும் ஏற்படுகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 89,90 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**எவர் ஒருவர் அல்லாஹ்விற்காகப் பள்ளிவாசலைக் கட்டுகின்றாரோ, அவருக்காக அல்லாஹ்வும் சுவர்க்கத்தில் அதுபோன்ற வீட்டைக் கட்டுகின்றான்**

**எனவே நமது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் உலகக் கவலைகளை விட இந்தக் கவலையை தம்மீது சுமத்தியவாறு அவர்களிடம் இறையச்சம் இருக்கின்றதா? இல்லையா என்று பார்க்க வேண்டும்**

**அல்லாஹ் தனக்கு முன்னால் குனிபவர்களின் ஈமானையும், நிச்சய உறுதியையும் அதிகரிக்கின்றான்**

**மறுமை நாளின் மீதான நம்பிக்கையே இறைவணக்கத்தின் பக்கம் நம்மைக் கவனம் செலுத்த வைக்கின்றது. அந்த இறைவணக்கம் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வின் திருப்தியைப் அடைவதற்காக செய்யப்பட வேண்டும்**

**எவர்களது உள்ளத்தில் மறுமை நாளின் மீது எந்த சந்தேகமும் வராதோ, மேலும் நல்ல முடிவிற்காக இறைவன் பக்கமே குனிந்திருப்பவரே உண்மையான அடியார் மற்றும் பள்ளிவாசலை நிரப்பக் கூடியவர்கள் ஆவர்**

**பெரும் முயற்சி செய்தவாறு பள்ளிவாசலை நிரப்ப வேண்டும்**

**பள்ளிவாசலின் உரிமையை செலுத்துவது, மேலும் அதை சுவர்த்திற்கு அழைத்துச் செல்லும் வழியாக ஆக்குவது, மேலும் அதனைக் கட்டுவதனால் சுவர்க்கத்தில் ஒரு வீட்டை கட்டுவது ஆகியவை மிகப்பெரிய பொறுப்பாகும்**

**ஏதாவதொரு இருப்பின் மீது எங்களுக்கு அச்சம் இருக்குமென்றால் அது இறைவனின் இருப்பின் மீதே ஆகும்**

**இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையில் தொடர்பு அதிகரிப்பதே துஆவின் உண்மைத்துவம் ஆகும்**

**தொழுகை ஆயிரக்கணக்கான தவறுகளை அகற்றி விடுகின்றது. மேலும் இறை நெருக்கத்தை பெறும் வழியாகும்**

**நபிமொழி மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்களின் ஒளியில் ஐவேளை தொழுகையை நிறைவேற்றுவது மற்றும் துஆ நுட்பமான ஞானத்தைப் பற்றிய நற்குறிப்பு, அஹ்மதிகளிடம் உண்மையான இறையச்சத்தை மேற்கொண்டவாறு பள்ளிவாசலை நிரப்புவதன் பக்கம் கவனமூட்டல் மேலும் ஸ்ராஸ்பெர்கில் மஹ்தி பள்ளிவாசலை ஹுஸூர் அவர்கள் திறந்து வைத்து பள்ளிவாசல் பற்றிய விவரங்களையும் எடுத்துக் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **பிரான்ஸ் ஸ்ட்ராஸ்பெர்கிலுள்ள மஹ்தி பள்ளிவாசலில் 11 அக்டோபர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اِنَّمَا يَعْمُرُ مَسٰجِدَ اللّٰهِ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَاَقَامَ الصَّلٰوةَ وَاٰتَى الزَّكٰوةَ وَلَمْ يَخْشَ اِلَّا اللّٰهَ فَعَسٰٓى اُولٰٓئِكَ اَنْ يَّكُوْنُوْا مِنَ الْمُهْتَدِيْنَ

ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பிரான்ஸிற்கு அல்லாஹ் ஒரு பள்ளிவாசலை கட்டுவதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். ஸ்ட்ராஸ்பெர்க் என்ற இந்த நகரத்தில் அல்லாஹ்வின் அருளால் புதிய அஹ்மதிகள் மற்றும் பாகிஸ்தானைச் சாராத அஹ்மதிகள் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், ஏறக்குறைய 75 சதவிகிதம் பேர் பாகிஸ்தானைச் சாராதவர்கள் ஆவர். மேலும் அல்லாஹ்வின் அருளால் கலப்பற்றத்தன்மை மற்றும் விசுவாசத்தில் முன்னேறி உள்ளனர்.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அவர்களுக்கு இங்கு ஒரு பள்ளிவாசலை வழங்கியுள்ளான். இங்குள்ள அஹ்மதிகள் முன்பை விட அதிகமாக ஜமாஅத் அமைப்புடன் இணைந்திருக்க முடியும். அல்லாஹ் இவர்களுக்கு நற்பாக்கியத்தையும் வழங்குவானாக.

நான் ஓதிய வசனத்தின் பொருளை படிக்கின்றேன். அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு தொழுகைகளை நிலைநாட்டி, ஸக்காத்து கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் அஞ்சாதவர் மட்டுமே அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளை நிர்வகிப்பார். இத்தகையவர்களே விரைவில் பெற்றி பெறக் கூடியவர்கள். (9:18)

அல்லாஹ் பள்ளிவாசலை கட்டுபவர்கள் மற்றும் அதனை நிரப்புபவர்களின் சிறப்பம்சமாக இதனைக் கூறியுள்ளான். அதாவது அவர்கள் அல்லாஹ் மீது நம்பிக்கை கொள்வார்கள். அதாவது அனைத்து ஆற்றல்களின் தலையூற்றாகவும், அதிபதியாகவும் இறைவனின் இருப்பே ஆகும். மற்ற அனைத்தும் ஒன்றுமற்றதாகும் என்று அவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

எனவே இந்த ஈமானை அடைவதற்கு அல்லாஹ்வின் முன்பு குனிவதும், அவனை வணங்குவதும் மிக முக்கியமாகும். அல்லாஹ் தனக்கு முன்னால் குனிபவர்களின் ஈமானையும், நிச்சய உறுதியையும் அதிகப்படுத்துகின்றான். பிறகு மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்வதையும் பள்ளிவாசலை நிரப்புபவர்களின் ஒரு சிறப்பம்சமாக அல்லது ஒரு நிபந்தனையாக எடுத்துக் கூறியுள்ளான். ஏனென்றால் மறுமை நாளின் மீதான நம்பிக்கையே இறைவணக்கத்தின் பக்கம் நம்மை கவனம் செலுத்த வைக்கின்றது. அந்த இறைவணக்கம் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வின் திருப்தியைப் அடைவதற்காக செய்யப்பட வேண்டும்.

இந்த விஷயத்தைக் எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்வதனால் ஏற்படும் பயன் என்னவென்றால், அதன் மூலமாக இறைஞானம் கிடைக்கின்றது. மேலும் உண்மையான இறைஞானம் உண்மையான இறையச்சமின்றி கிடைக்க முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். இறுதி நாள் தொடர்பாக சந்தேகம் எழுவது ஈமானை அபாயத்தில் ஆழ்த்தி விடுகின்றது. மேலும் நல்ல முடிவு கிடைக்கும் என்பதில் நம்பிக்கை கொள்ள முடியாது. பிறகு மனிதன் ஈமானில் நிலைத்திருப்பான் என்ற விஷயமும் நிலைத்திருக்காது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 53,54)

எனவே எவர்களது உள்ளத்தில் மறுமை நாளின் மீது எந்த சந்தேகமும் வராதோ, மேலும் நல்ல முடிவிற்காக இறைவன் பக்கமே குனிந்திருப்பவரே உண்மையான அடியார் மற்றும் பள்ளிவாசலை நிரப்பக் கூடியவர்கள் ஆவர்.

மேலும் அன்னார் கூறினார்கள்: மேலும் எவர்கள் தொழுகையை நிலைநாட்டக் கூடியவர்களாக இருக்கின்றார்களோ அவர்களால்தான் பள்ளிவாசலை நிரப்ப முடியும். அல்லது அவர்களுக்குத்தான் பள்ளிவாசலை கட்டுவதனால் பயன் கிடைக்கும். இன்னும் சொல்வதென்றால், பள்ளிவாசலை ஐவேளையும் நிரப்புவது நமது பணியாகும்.

அல்லாஹ் இங்கு தொழுகையை நிலைநாட்டக் கூடியவர்கள் என்று கூறியுள்ளான். நிலைநாட்டுதல் என்பதன் பொருள் ஜமாஅத்தாக தொழுகையை நிலைநாட்டுதல் என்பதாகும். பிறகு ஸக்காத்து செலுத்துவதன் பக்கமும், பொருள் தியாகம் செய்வதன் பக்கமும் பள்ளிவாசலை நிரப்பக் கூடியவர்களின் சிறப்பம்சமாக கூறியுள்ளான். இந்த சிறப்பம்சங்கள் அவர்களிடம் இருக்க வேண்டும். எனவே இறைவனது மார்க்கத்தைப் பரப்புவதற்குத் தியாகங்கள் செய்யுங்கள். இறை படைப்பினங்களின் உரிமைகளையும் செலுத்த வேண்டும். இவை அனைத்தையும் நாம், அல்லாஹ்வின் மீதான அச்சம் நமது உள்ளத்தில் அதிகரிக்க வேண்டும். மேலும் அவனது திருப்தியைப் பெறுவதற்கு நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காக செய்ய வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: இந்த அனைத்தையும் செய்யக் கூடியவர்கள்தான் அல்லாஹ்வின் பார்வையில் நேர்வழி பெற்றவர்கள் ஆவர். அல்லது அவர்கள் நேர்வழி பெற்ற மக்களில் கணக்கிடப்படுவர்.

ஆக நாம் எப்போதும் இந்த துஆவை செய்து வர வேண்டும். மேலும் இதற்கேற்ப முயற்சி செய்ய வேண்டும். மேலும் புதிய அஹ்மதிகளும், குறிப்பாக பழைய அஹ்மதிகளும், குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து வந்திருக்கின்ற அஹ்மதிகள் இந்த விஷயத்தின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அதாவது அவர்கள் அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு புதிதாக வரக் கூடியவர்களுக்காக தமது முன்மாதிரியை நிலைநாட்டியவாறு, நாம் பள்ளிவாசலை கட்டிய பிறகு இந்த எண்ணத்துடனும், மேலும் நமது செயல் நிலைமைகளை அவனது இந்த கூற்றிற்கேற்ப ஆக்கிக் கொண்டவாறு பள்ளிவாசலை நிரப்புவதற்கான நற்பாக்கியத்தை எங்களுக்கு வழங்குவாயாக. மேலும் எங்களை நேர்வழி பெற்ற மக்களுடன் இணைப்பாயாக என்று துஆ செய்ய வேண்டும்.

மேலும் எங்களது பலவீனங்கள் மற்றும் குறைகளின் காரணமாக, பள்ளிவாசலை நிரப்புபவர்கள் தொடர்பான அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படாமல் எங்களது உலக மற்றும் மறுமையை பாழாக்குபவர்களாக நாங்கள் ஆகி விடக்கூடாது. எங்கள் மீது கருணை காட்டியவாறு எங்களை நேர்வழியிலிருந்து விலகிச் செல்வதிலிருந்து காப்பாற்றுவாயாக. மேலும் எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. எங்களது எண்ணங்களை தூய்மையானதாகவும், நல்லதாகவும் ஆக்குவாயாக. நாங்கள் உனது உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் இந்தப் பகுதியில் உனது மார்க்கத்தின் தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். நாங்கள் இந்த பள்ளிவாசலைக் கட்டியதுடன் உன்னால் அனுப்பப்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூற்றிற்கேற்ப இந்தப் பள்ளிவாசலை தப்லீக்கின் வழியாக ஆக்கக் கூடியவர்களாக விளங்க வேண்டும். மேலும் உனது அருளைப் பொழிந்தவாறு எங்களை எங்களது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களின் இந்த கூற்றிற்கு எங்களை வாரிசாக்குவாயாக.

அதில் அன்னார் கூறினார்கள்: எவர் ஒருவர் அல்லாஹ்விற்காக பள்ளிவாசலைக் கட்டுகின்றாரோ, அவருக்காக அல்லாஹ்வும் சுவர்க்கத்தில் அதுபோன்ற வீட்டைக் கட்டுகின்றான்.

(சஹீஹுல் புகாரி.... ஹதீஸ் எண் 450)

எனவே எங்களை உண்மையான நம்பிக்கையாளராக ஆக்கியவாறு உனது அருளால் அருள்பாலித்துக் கொண்டே இருப்பாயாக.

ஆக இந்த விஷயங்களைப் பெறுவதற்கு முதலில் ஒவ்வொரு அஹ்மதியும் தமது தொழுகைகளை ஆய்வு செய்ய வேண்டும். அவர்களுக்கு ஐவேளை தொழுகைகளை முறையாக தொழுவதன் பக்கம் கவனம் இருக்கின்றதா? பிறகு ஜமாஅத்தாக தொழுவதன் பக்கம் கவனம் இருக்கின்றதா? பள்ளிவாசல் கட்டப்படுவது மட்டும் போதுமானது கிடையாது. சுவர்க்கத்தில் வீடு கட்டுவதற்கு, பள்ளிவாசலைக் கட்டுவது மட்டும் போதுமானது கிடையாது. மாறாக இதற்கு நம்பிக்கை கொள்வதுடன் செயல்களின் தேவையும் இருக்கின்றது. அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடப்பதும் அவசியமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இருப்பதன் உரிமையை செலுத்துவதும் அவசியமாகும்.

முஸ்லிம்கள் ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான பள்ளிவாசல்களைக் கட்டுகின்றனர். ஆனால் அதில் பிரிவினை தொடர்பான தர்ஸே வழங்கப்படுகின்றது. அதில் அல்லாஹ்வின் மீதான அச்சம் மற்றும் இறைப்படைப்பினங்களின் உரிமைகளை செலுத்துவது தொடர்பாக எடுத்து கூறுவதற்குப் பகரமாக சுய லாபம் அல்லது தமது பிரிவின் பயன் தொடர்பான விஷயங்களே எடுத்துக் கூறப்படுகிறது. அல்லது புதிய புதிய பித்அத்துகளை பெயர்தாங்கிய ஆலிம்கள் உருவாக்குகின்றனர். இதற்கு பெருமானார் (ஸல்) அவர்களின் சுன்னத்துடன் (நடைமுறையுடன்) எவ்வித தொடர்பும் கிடையாது. அந்த பள்ளிவாசல்கள் அல்லாஹ்வின் பார்வையிலும், மேலும் அவனது தூதரின் பார்வையிலும் சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் பள்ளிவாசல்கள் அல்ல.

ஆக பள்ளிவாசலின் உரிமையை செலுத்துவது, மேலும் அதை சுவர்த்திற்கு அழைத்துச் செல்லும் வழியாக ஆக்குவது, மேலும் அதனை கட்டுவதனால் சுவர்க்கத்தில் ஒரு வீட்டை கட்டுவது ஆகியவை மிகப்பெரிய பொறுப்பாகும். மேலும் இந்தப் பொறுப்பை ஒவ்வொரு அஹ்மதியும் புரிந்து கொண்டு, இதன்படி செயல்பட்டு, மேலும் இதன் உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் இந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப்பேரன்பர் நம்மை ஒரு உண்மையான முஸ்லிமாக ஆக்குவதற்காகவும், மேலும் இறைவணக்கங்கள் மற்றும் தமது பள்ளிவாசல்களின் உரிமையை செலுத்துவது, மற்றும் இறைப் படைப்பினங்களின் உரிமைகளை செலுத்துவது தொடர்பாக எந்த விஷயங்களை நமக்கு எடுத்துக் கூறியுள்ளார்களோ அதனைப் புரிந்து கொள்வதும், அதன்படி செயல்படுவதும் அவசியமாகும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் மீது உறுதியான மற்றும்

முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளோம். மேலும் இறுதி நாளின் மீது முழுமையான நம்பிக்கை வைத்துள்ளோம். மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நமது தொழுகைகளை நிலைநாட்டக் கூடியவர்களாவோம். மேலும் தமது செல்வத்தைத் தியாகம் செய்து அல்லாஹ்வின் அடியார்களின் உரிமைகளையும் செலுத்தக் கூடியவர்களாவோம். மேலும் எந்த இருப்பின் மீதாவது நமக்கு அச்சம் இருக்குமென்றால் அது இறைவன் மீதான அச்சமே ஆகும் என்று நம்மால் கூற முடியும்.

அல்லாஹ்வின் மீதான அச்சமே நமது உள்ளத்தில் இருக்கின்றது. ஏனென்றால் நாம் அவனை நேசிக்கிக் கூடியவர்களாவோம். எந்தவொரு உலகப் பொருட்களின் மீதும் எங்களுக்கு அச்சம் கிடையாது. இறைவன் மீது எந்த அளவுக்கு எங்களுக்கு அன்பு இருக்கின்றதோ அதுபோன்று உலகப் பொருட்களின் மீது எங்களுக்கு அன்பு கிடையாது. நாங்கள் எங்களது உலகப் பலனை எங்களது ஈமான் மற்றும் எங்களது மார்க்கத்திற்காகத் தியாகம் செய்யக் கூடியவர்களாவோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு உண்மையான அஹ்மதி ஆகுவது மற்றும் இறைவனின் உண்மையான அடியராக ஆகுவதற்கு எந்த போதனைகளை நமக்கு வழங்கியுள்ளார்களோ அதிலிருந்து சிலவற்றை நான் எடுத்துக் கூறுகின்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் எந்த அளவுக்கு ஆற்றலை வழங்கியுள்ளானோ அதாவது கை, கால்கள் மற்றும் இதர உறுப்புகள், கண்கள், நாக்கு போன்ற ஒவ்வொன்றையும் அவன் நமக்கு வழங்கியுள்ளான். இதனை அவன் வீணாக்குவதற்காக வழங்கவில்லை. இதனை ஆகுமான வழிகளில் பயன்படுத்துவதே அதன் பரிணாம வளர்ச்சியாகும். இதனை ஆகுமான வழிகளில் பயன்படுத்த வேண்டும். இதனை தவறாக பயன்படுத்தக்கூடாது.

எனவேதான் இஸ்லாம் கண்னை எடுப்பதற்கான போதனையை வழங்கவில்லை. மாறாக, இதனை ஆகுமான வழிகளில் பயன்படுத்துவது உள்ளத்தை தூய்மைப்படுத்துவதாகும். கண்களால் தீய பார்வையை பார்த்தால் கண்ணை எடுத்து விட வேண்டும் என்பதல்ல. மாறாக, கண்களை ஆகுமான வழிகளில் பயன்படுத்த வேண்டும். ஆக இதனைத் தூய்மையாக வைப்பதும், தூய முறையில் பயன்படுத்துவதும்தான் உண்மையான விஷயமாகும்.

அன்னார் கூறினார்கள்: قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ

அதே போன்று இங்கும் கூறியுள்ளான்: இறையச்சமுடையவர்களின் வாழ்க்கையை படம்பிடித்தவாறு இறுதியில் அதன் முடிவைப்பற்றி, وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ என்று கூறியுள்ளான். அதாவது அவர்கள் இறையச்சத்தின்படி நடப்பார்கள். மேலும் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள். தொழுகை அவர்களை தடுமாற்றமடையச் செய்கின்றது. ஆனால் அவர்கள் தொழுகையை நிலைநாட்டுகின்றனர். அதாவது பல்வேறு சிந்தனைகள் தொழுகையின்போது வருகின்றது. பிறகு அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்துகின்றனர். மேலும் இறைவன் வழங்கிய அருட்கொடைகளிலிருந்து அவனது வழியில் அவர்கள் செலவு செய்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: முந்தைய மற்றும் தற்போதைய இறைவேதங்களின் மீது அவர்கள் ஈமான் கொள்கின்றனர். அல்லாஹ் அனைத்து வேதங்களின் மீதும் ஈமான் கொள்ளும்படி கூறியுள்ளான். எனவே அவர்கள் ஈமான் கொள்கின்றனர். மேலும் இறுதியில் அவர்கள் நிச்சய உறுதி வரை சென்றடைகின்றனர். இவர்களே நேர்வழியில் நிலைத்து நிற்பவர்கள் ஆவர். அது எத்தகைய பாதை என்றால் அது முறையாக நேராக செல்லக் கூடியதாக இருக்கின்றது. மேலும் அதன் மூலம் மனிதன் நேர்வழியைப் பெறுகின்றான். இத்தகைய மக்களே நேர்வழி பெற்றவர்கள் ஆவர்.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: எனவேதான் ஆரம்பத்திலயே இறைவன் நமக்கு இறையச்சத்தின்படி நடக்குமாறு போதனை வழங்கியவாறு எத்தகைய ஒரு வேதத்தை நமக்கு வழங்கியுள்ளான் என்றால் அதில் இறையச்சத்தை மேற்கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

அன்னார் கூறுகின்றார்கள்: எனவே நமது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் உலகக் கவலைகளை விட இந்தக் கவலையை தம்மீது சுமத்தியவாறு அவர்களிடம் இறையச்சம் இருக்கின்றதா? இல்லையா என்று பார்க்க வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 35)

மனிதன் தன்னிடத்தில் இறையச்சம் இருக்கின்றதா? இல்லையா? என்பதை எப்படி பார்ப்பது? இறையச்சமுடையவர் யார்? என்பது தொடர்பாக எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனது வேதத்தில் இவ்விஷயம் காணப்படுகிறது. அதாவது இறையச்சமுடையவர் யார் என்றால், அவர் பணிவுடன் நடப்பவர் ஆவார். அவர்களிடம் மிகுதியான மென்மை இருக்கும். பணிவு இருக்கும். அவர்கள் தற்பெருமைக்கான பேச்சுக்களைப் பேசுவதில்லை. அவர்களிடம் ஆணவம் முற்றிலும் இருக்காது. எவ்வாறு சிறியவன் பெரியவர்களிடம் பேசுவானோ அதுபோன்று அவர்களது பேச்சுக்கள் இருக்கும்.

அன்னார் கூறினார்கள்: எதன் மூலம் நமக்கு நேர்வழி கிடைக்குமோ அதனை நாம் செய்ய வேண்டும். அல்லாஹ் எவரைக் குறித்தும் பொறுப்பேற்கவில்லை. அவன் குறிப்பான இறையச்சத்தையே விரும்புகின்றான். எவர் இறையச்சத்தை மேற்கொள்வாரோ அவர் உயர் அந்தஸ்தை அடைவார்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ அல்லது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களோ சொத்து என்ற அடிப்படையில் கண்ணியத்தைப் பெறவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: நமது நம்பிக்கை என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தை இணை வைப்பவராக இருக்கவில்லை. ஆனால் அவன் நபித்துவத்தை வழங்கவில்லை.

இது பெருமானார் (ஸல்) அவர்களின் இயல்பில் இருந்த அந்த உண்மையின் காரணமாகவே அன்னாருக்குக் கிடைத்தது. இது இறை அருளாகும். நபிமார்களின் தந்தையாகிய ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது உண்மை மற்றும் இறையச்சம் ஆகியவற்றின் காரணமாகவே மகனை அறுப்பதில் பின்வாங்கவில்லை. அவர்கள் சுயமே நெருப்பில் போடப்பட்டார்கள்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

நமது எஜமானரும், தலைவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் விசுவாசத்தைப் பாருங்கள். அவர்கள் அனைத்து விதமான தீய திட்டத்தையும் எதிர் கொண்டார்கள். பல்வேறு வகையான துன்பங்களையும், கஷ்டங்களையும் மேற்கொண்டார்கள். ஆனால் அதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இந்த உண்மை மற்றும் விசுவாசத்தினால் தான் அல்லாஹ் அருள் செய்தான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ
يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும் சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள். (33:57)

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 37)

ஆக நமக்கு இதுவே கட்டளையாகும். அதாவது துஆ ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என விரும்புகின்றீர்கள் என்றால் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுங்கள். தரூது ஓதாமல் செய்யப்படுகின்ற துஆக்கள் வானம் வரை சென்றடைவதில்லை. மனிதன் வெற்றிகளைப் பெற முடியாது. எனவே இறைவணக்கத்தின் தரத்தை சிறந்ததாக ஆக்குவதற்கும், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும் தரூது ஓதுவது அவசியமாகும். மேலும் தரூது அனுப்பக் கூடியவர்கள் நிச்சயமாக பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை தமக்கு முன் வைப்பார். அதாவது அன்னார் (ஸல்) அவர்கள் எவ்வாறு இறைவணக்கத்தின் தரத்தை நிலைநாட்டினார்கள்? மேலும் தமது சமுதாயத்திற்கு இதைப் பற்றி கவனமூட்டினார்கள்?

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையில் உள்ளது.

(சுனன் நிஸாயி.... ஹதீஸ் எண் 3391)

பிறகு படைப்பினங்களின் உரிமைகளை செலுத்துவது தொடர்பாகவும் தமது முன்மாதிரியை அன்னார் நிலைநாட்டியுள்ளார்கள். இதைப் போன்ற உதாரணங்கள் கிடைப்பது கஷ்டமாகும். தம்மைப் பற்றி அன்னார் கவலைப்பட்டதில்லை. மலை அளவு செல்வங்கள் இருந்தாலும் அதனை அன்னார் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள். யாசிப்பவர் எவராது வந்தால் அவரை வெறுங் கையுடன் அனுப்பியது கிடையாது.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயில்... ஹதீஸ் எண் 2312)

இருப்பினும் அன்னாரது கரங்கள் எப்போதும் படைப்பினங்களின் தொண்டிற்காகத் தயாராக இருந்தது.

ஆக தரூது அனுப்பக்கூடியவர் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை முன்னிறுத்தியவாறு தரூது அனுப்பும்போதுதான் அவரது கவனம் பெருமானார் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய அந்த முன்மாதிரியின்படி செயல்படுவதன் பக்கம் செல்லும். இந்த நிலைமை இருக்குமென்றால் பிறகு அல்லாஹ் தனது அன்பிற்குரிய நபி, தனது அன்பிற்குரிய அடியானின் அன்பின் வெளிப்பாடு மற்றும் அவர்கள் மீது தரூது அனுப்பியதன் காரணமாக நமது துஆக்களையும் ஏற்றுக் கொள்ளும் தகுதியை வழங்குவான். மேலும் அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்று எளிமையையும், மென்மையையும் வெளிப்படுத்தக் கூடியவர்களாக ஆகி, இறையச்சத்தின்படி நடக்கக் கூடிய அந்த மக்களுடன் நாம் இணைய முடியும். மேலும் அந்த மக்களே நேர்வழி பெறக்கூடிய மக்களாவர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகின்றார்கள்: நாம் வெறும் வாதம் மட்டும் செய்யக் கூடியவர்களாக இருப்போம் என்றால் பிறகு அதனால் எவ்வித பயனும் கிடையாது.

அன்னார் கூறுகின்றார்கள்: வெற்றி பெறுவதற்கு இறையச்சம் அவசியமாகும். வெற்றியை நீங்கள் விரும்பினால் பிறகு இறையச்சமுடையவராக ஆகி விடுங்கள். மேலும் இதுவே உண்மையான இறையச்சமாகும். இதுவே அல்லாஹ்வின் உண்மையான அடையாளத்தை காட்டிக் கொடுக்கின்றது. மேலும் அவனது கட்டளைகளின்படி நடப்பவர்களாக ஆக்குகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 232)

பிறகு தொழுகையின் உண்மைத்துவத்தை எடுத்துக் கூறியவாறு தொழுகை என்பது என்ன? உண்மையான தொழுகை எவ்வாறு இருக்க வேண்டும்? என்பது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்:

நாவால் இறைவன் இருக்கின்றார் என்று பெரும்பாலார் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் அவர்களிடம் நாத்தீகம் இருப்பது தெரிய வரும். ஏனென்றால், உலகப் பணிகளில் அவர்கள் மூழ்கி விடும்போது அவர்கள் இறைவனது தண்டனை மற்றும் அவனது மகத்துவத்தை முற்றிலும் மறந்து விடுகின்றனர்.

எனவே இந்த விஷயம் மிகவும் அவசியமாகும். அதாவது நீங்கள் துஆவின் மூலமாக இறை ஞானத்தை வேண்டுங்கள். அல்லாஹ்வுடனான தொடர்பை துண்டிப்பது மரணமாகும் என்ற அறிவு ஏற்படாத வரை அவன் மீதான முழுமையான நம்பிக்கை ஏற்பட முடியாது. பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கு துஆ செய்கின்ற அதே வேளையில் திட்டங்களைத் தீட்டுவதையும் விட்டு விடாதீர்கள். துஆ செய்வதும் அவசியமாகும். திட்டங்களைத் தீட்டுவதும் அவசியமாகும். மேலும் எந்த சபைகளில் கலந்து கொள்வதால் பாவம் செய்வதற்கான எண்ணம் உருவாகின்றதோ அதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்.

எனவே ஒவ்வொருவரும் சுயமே இதனை ஆய்வு செய்ய முடியும். எந்த எந்த சபைகள் அல்லது டிவியில் வருகின்ற எந்த எந்த நிகழ்ச்சிகளினால் பாவம் செய்வதற்கான எண்ணம் ஏற்படுகின்றதோ அதனை நாம் விட வேண்டியது வரும். அதனை விட்டு விடுங்கள். மேலும் அத்துடன் துஆவும் செய்து வாருங்கள். அல்லாஹ்வின் அருளினால் அதை விட்டு விடுவதற்கான நற்பாக்கியமும் கிடைக்கின்றது. எனவே இதற்காகவும் துஆ செய்யுங்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

ஆண்களுக்கு அவர்களின் பெற்றோரும், நெருங்கிய உறவினரும் விட்டுச் செல்வதில் ஒரு பங்கு உண்டு. பெண்களுக்கும், அவர்களின் பெற்றோரும் நெருங்கிய உறவினரும் விட்டுச் செல்வதில் ஒரு பங்கு உண்டு. அது குறைவாக இருந்தாலும், அதிகமாக இருந்தாலும் சரியே. (அது இறைவனால்) வரையறுக்கப்பட்ட பங்காகும். (4:8)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

நன்றாக அறிந்து கொள்ளுங்கள். இறை நியதிக்கேற்ப மனிதனுக்கு ஏற்படுகின்ற ஆபத்துகள் அனைத்தும் இறைவனது உதவி இன்றி ஒருபோதும் விலகாது. தொழுகை ஐவேளை நிறைவேற்றப்படுகின்றது. இதிலும் இதன் பக்கமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது எப்போது வரை மன எழுச்சி மற்றும் எண்ணங்களிலிருநது அதனைப் பாதுகாப்பாக வைக்கவில்லையோ அப்போது வரை அது உண்மையான தொழுகையாக இருக்காது. தொழுகை என்பது வெறும் குனிந்து எழுவதோ, சடங்கு ரீதியாக செய்யப்படுவதோ அல்ல.

தொழுகை எத்தகைய விஷயம் என்றால் அதனை உள்ளமும் உணர்ந்து ஆன்மா உருகி ஒரு அச்சத்திற்குரிய நிலையில் இறை சந்நிதானத்தில் விழுவதாகும். எதுவரை ஆற்றல் இருக்கின்றதோ அதுவரை உருக்கத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஆன்மாவில் இருக்கின்ற பாவங்கள் நீங்குவதற்காகப் பணிவுடன் வேண்ட வேண்டும். இத்தகைய தொழுகையே அருளுக்குரியதாகும். இதில் அவர் நிலைத்து நின்றால் பிறகு அவர் இரவில் அல்லது பகலில் ஒரு ஒளி அவரது உள்ளத்தில் இறங்குவதையும், தீமையைத் தூண்டக்கூடிய ஆன்மா மெதுமெதுவாக மறைவதையும் அவர் பார்ப்பார். எவன் அவனைப் படைத்தானோ அவனிடமே அதற்குரிய மருந்து இருக்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 123)

அதாவது அல்லாஹ்வே அவனுக்கு சிகிச்சை அளிக்க முடியும். எனவே ஆன்மாவின் தீமைகள் மற்றும் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கு அல்லாஹ்விடமே அவனது அருளை வேண்ட வேண்டும்.

பிறகு தொழுகையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: தொழுகையே இறைவணக்கத்தின் சத்து ஆகும். எனவே எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது தொழுகையின்றி அல்லது அல்லாஹ்வால் கூறப்பட்டுள்ள வழிமுறைகளின்றி இறைவணக்கத்தின் உரிமைகளை செலுத்த முடியாது. தொழுகைக்கு சில நிபந்தனைகளும் உள்ளன. இதனையும் நிறைவேற்றுவது அவசியமாகும். தொழுகையில் இந்த விஷயத்தையும் கருத்தில் கொள்வது அவசியமாகும். அதாவது நான் இறைவனது அருளை வேண்டியவாறு நின்கின்றேன்.

இந்த நிலைமையைப் பற்றி எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: தொழுகை மற்றும் துஆ ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு என்ன? என்று ஒரு முறை நான் எண்ணிப் பார்த்தேன். ஹதீஸில் வந்துள்ளது. அஸ்ஸலாத்து ஃபித்துஆ – அஸ்ஸலாத்து மஹல் இபாது. அதாவது தொழுகையே துஆ ஆகும். தொழுகை இறைவணக்கத்தின் சத்து ஆகும். மனிதனது துஆ உலக விஷயங்களுக்காக மட்டுமே இருக்குமென்றால் பிறகு அதன் பெயர் தொழுகை கிடையாது.

மனிதன் துஆ செய்கின்றான். தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வருகின்றான். ஐவேளை தொழுகைகளைத் தொழ ஆரம்பித்து விடுகின்றான். நீண்ட துஆக்களை செய்கின்றான். அதிகமாக அழுகின்றான். இதனையெல்லாம் அவன் ஏன் செய்கின்றான் என்றால் அவனது சில உலக விவகாரங்கள் இருக்கின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: உலக விஷயங்களுக்காக மட்டுமே நீங்கள் தொழுகின்றீர்கள் என்றால் பிறகு அது தொழுகை என்று அழைக்கப்பட மாட்டாது. ஆனால் மனிதன் இறைவனை சந்திக்க விரும்பினால் மேலும் அவனது திருப்தியே குறிக்கோளாக இருக்குமென்றால், மேலும் பணிவு, தன்னடக்கத்துடன் இறைவனுக்கு முன்னால் நின்றவாறு அவனது திருப்தியை வேண்டியவாறு, தமக்குரிய விஷயத்தை மட்டுமே கேட்காமல் அல்லாஹ்வின் திருப்தியை வேண்டினால் அப்போதுதான் அது தொழுகையாக அமையும்.

இறைவன் மற்றும் மனிதனுக்கிடையிலுள்ள தொடர்பு அதிகரிப்பதுதான் துஆவின் உண்மைத்துவமாகும். இத்தகைய துஆ தான் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியாகும். மேலும் இது மனிதனை தேவையில்லாத விஷயங்களிலிருந்து அகற்றுகின்றது. உண்மையான விஷயம் என்னவென்றால், மனிதன் இறை திருப்தியைப் பெற வேண்டும். மேலும் அதற்குப் பிறகு மனிதன் தமது உலக தேவைகளுக்காகவும் துஆ செய்ய வேண்டும். முதலில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு துஆ செய்யுங்கள். பிறகு உலகத் தேவைகளுக்காக துஆ செய்யுங்கள். அதுவும் அல்லாஹ்வின் அருளினாலேயே கிடைக்கும்.

இவ்வாறு ஏன் வைக்கப்பட்டுள்ளது என்றால், உலக கஷ்டங்கள் சில நேரங்களில் மார்க்க விவகாரங்களில் தடையாக இருக்கின்றது. சில பலவீனங்கள் இருக்கின்றன. உலக விவகாரங்கள் தடுமாற்றத்திற்குக் காரணியாக அமைந்து விடுகின்றன. எனவே முதலில் அல்லாஹ்விடம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பிறகு உலக விவகாரங்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 367,368)

ஆக இதுவே தொழுகையின் உண்மையான நிலையாகும். இதனை அடைவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயத்தை விளக்கியவாறு கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ளுங்கள். ஈமான் கொண்டுள்ளோம் என்ற வாதம் இருக்குமென்றால் பிறகு தொழுகையை நிறைவேற்றுவதும் அவசியமாகும். மூன்று தொழுகைகளை தொழுது விட்டு அல்லது நான்கு தொழுகைகளைத் தொழுது விட்டு, சிலர் இவ்வாறு செய்கின்றனர். பிறகு ஈமான் கொண்டுள்ளோம் என்று வாதம் செய்வது தவறானதாகும். ஏனென்றால் ஈமானின் ஆணி வேர் தொழுகையாகும். மேலும் எதற்கு ஆணிவேரே இருப்பதில்லையோ அது சத்தற்ற மரத்தைப் போன்றதாகும். அதனை ஒரு சாதாரண காற்று பூமியிலிருந்து கீழே விழச் செய்து விடும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயத்தை விளக்கியவாறு கூறுகின்றார்கள்:

எவ்வாறு வெயில் இருக்கின்றபோது வானத்தில் மேகங்கள் ஒன்று கூடி விடுகின்றதோ மேலும் மழை பொழிவதற்கான நேரமும் வருகின்றதோ அவ்வாறே மனிதனின் துஆக்கள் ஒரு ஈமானிய துடிப்பை ஏற்படுத்துகின்றது. தொழுகை என்னவென்றால், அதில் மனிதன் உருக்கத்துடனும், பணிவுடனும், கண்ணியத்துடனும் இறைவன் முன் நிற்பதாகும். மனிதன் கவனமற்றவனாக செயல்படுவானேயானால் பிறகு இறைவனும் தேவைகள் அற்றவன் ஆவான். பிறகு அவன் எவரையும் பெருட்படுத்தமாட்டான். ஒவ்வொரு

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்படாமல், அவன் (ஏற்படுத்திய) வரம்புகளை மீறுபவரை அவன் நெருப்பில் நுழையச் செய்வான். அவர் அதில் நீண்ட காலம் இருந்து கொண்டிருப்பார். அவருக்கு இழிவுபடுத்தக்கூடிய தண்டனையும் (விதிக்கப்பட்டு) உள்ளது. (4:15)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

சமுதாயமும் எப்போது வரை நிலைத்திருக்கும் என்றால் எப்போது வரை அல்லாஹ்வின் கவனம் அதன் மீது இருக்குமோ அப்போது வரை நிலைத்திருக்கும். ஈமானின் ஆணிவேரும் தொழுகையாகும்.

இறைவனுக்கு நமது தொழுகையின் அவசியம் என்ன? என்று சில முட்டாள்கள் கூறுகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: அறிவற்றவர்களே! இறைவனுக்கு எந்தத் தேவையும் இல்லை. ஆனால் உங்களுக்குத் தேவை இருக்கின்றது. இறைவன் உங்கள் பக்கம் கவனம் செலுத்துவதற்கு உங்களுக்கு தொழுகையின் தேவை இருக்கின்றது. இறைவன் கவனம் செலுத்துவதனால் சீர்குலைந்துபோன பணிகள் சரியாகி விடுகின்றன. தொழுகை ஆயிரக்கணக்கான தவறுகளை நீக்கி விடுகின்றது. மேலும் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழி தொழுகையாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 378)

தொழுவதனால் இறை நெருக்கம் மட்டும் கிடைப்பதில்லை. மாறாக தவறுகள் மன்னிக்கப்படுகின்றன. மேலும் சீர்குலைந்துபோன பணிகள் சரியாகி விடுகின்றன. இன்னும் சொல்வதென்றால், நல்ல எண்ணத்துடன் பள்ளிவாசலுக்கு வருபவர்கள் மற்றும் அமர்ந்து தொழுகைக்காகக் காத்திருப்பவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பள்ளிவாசலில் தொழுகைக்காக எப்போது வரை ஒரு நபர் காத்திருப்பாரோ அவர் தொழுகையிலேயே இருப்பதாகக் கருதப்படுவார். பள்ளிவாசலில் அமர்வதும், மேலும் அங்கு ஸிக்ரே இலாஹி செய்வதும் அவர் தொழுகையில் இருப்பதாகவே கருதப்படும். வானவர்கள் அந்த நபர் மீது தரூது அனுப்பிக் கொண்டே இருக்கின்றனர். மேலும், அல்லாஹ்வே! இவர் மீது கருணை காட்டுவாயாக. மேலும் இவரை மன்னிப்பாயாக. இவரது பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்வாயாக என்றும் அவர்கள் வானவர்கள் கூறுவர்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் மஸாஜிது.... ஹதீஸ் எண் 649)

ஆக பள்ளிவாசலுக்கு வருகை தந்து தொழக் கூடியவர் பள்ளிவாசலுக்கு வந்து தொழுவதனால் மட்டுமல்ல. மாறாக காத்திருப்பதனாலும் அதற்குரிய கூலி கிடைக்கின்றது. இது எத்தகைய மகத்தான கூலியாகும். அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வானவர்கள் அவருக்காக துஆக்கள் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆக இத்தகைய கருணைமிக்க இறைவனை வணங்குவதன் உரிமையை செலுத்துவதற்கு நாம் எந்த அளவுக்கு கவலையுடன் முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஐந்து நேரமும் வந்து பள்ளிவாசலை நிரப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

மார்க்கத்தின் நோக்கம் ஒற்றுமையை உருவாக்குவது, ஒரு சமுதாயத்தை உருவாக்குவது என்பதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் விருப்பம் இதுவாகும். அதாவது அனைத்து மனிதர்களையும் ஒரே ஆன்மாவைப் போன்று ஆக்க வேண்டும். அதன் பெயர் ஒற்றுமை ஆகும். அதிகமான மக்கள் ஒன்று கூடுகின்றனர் என்றால் ஒரு மனிதரைப் போன்று அவர்கள் ஆகி விடுகின்றனர். மார்க்கத்தின் நோக்கமும் இதுவாகவே இருக்கின்றது. அதாவது தஸ்பீஹின் மணிகளைப் போன்று ஒற்றுமையின் ஒரு நூலில் அனைவரும் ஒன்று சேர்க்கப்பட வேண்டும். ஜமாஅத்தாக தொழப்படுகின்ற தொழுகைகளும் இந்த ஒற்றுமைக்காகவே ஆகும். இதன் மூலம் அனைத்து தொழுகையாளிகளும் ஒரு இருப்பாகவே கருதப்பட வேண்டும்.

மேலும் ஒருவர் மற்றொருவருடன் இணைந்து நிற்பதற்கான கட்டளை ஏன் என்றால், எவரிடத்தில் அதிகமான ஒளி இருக்கின்றதோ அவர் மற்ற பலவீனமானவர் மீது அந்த ஒளியின் மூலம் ஆற்றலை வழங்க வேண்டும். எதுவரை என்றால் ஹஜ்ஜும் கூட இதற்காகவே ஆகும். இந்த ஒற்றுமையை உருவாக்கவும், நிலைநாட்டவும் அல்லாஹ் இவ்வாறு ஆரம்பம் செய்தான். அதாவது முதலில் இந்த கட்டளையை வழங்கினான். அதாவது ஒவ்வொரு முஹல்லாவைச் சார்ந்தவர்களும் ஐவேளை தொழுகைகளை ஜமாஅத்தாக முஹல்லாவின் பள்ளிவாசல்களில் நிறைவேற்ற வேண்டும். இதன் மூலம் ஒருவர் மற்றவரிடம் நல்லொழுக்கத்தை பகர்தல் வேண்டும். மேலும் அனைத்து ஒளிகளும் இணைந்து பலவீனத்தை அகற்ற வேண்டும். மேலும் ஒருவர் மற்றவருடன் அறிமுகம் ஏற்பட்டு அன்பு ஏற்பட வேண்டும்.

அறிமுகம் என்பது மிகச் சிறந்த விஷயமாகும். ஏனென்றால் இதன் மூலம் அன்பு அதிகரிக்கின்றது. இது ஒற்றுமைக்கு அடிப்படையாகும். அறிமுகமான எதிரி ஒரு அறியாத நண்படை விடச் மிகச் சிறந்தவர் ஆவார். ஏனென்றால், வெளிநாட்டில் சந்திக்கும்போது இந்த அறிமுகத்தின் காரணமாக உள்ளத்தில் அன்பு உருவாகி விடுகின்றது.

இரண்டாவது கட்டளை என்னவென்றால், ஜுமுஆ நாளன்று ஜாமிஆ பள்ளிவாசலில் ஒன்றுகூட வேண்டும். ஏனென்றால், ஒரு நகரத்தைச் சார்ந்த மக்கள் தினமும் ஒன்று கூடுவது சிரமமாகும். எனவேதான் இந்த ஆலோசனை தரப்பட்டுள்ளது. அதாவது நகரத்தைச் சார்ந்த அனைத்து மக்களும் வாரத்தில் ஒரு முறை சந்தித்து அறிமுகத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்போது இங்கு தூரம் அதிகமாக இருந்தாலும் எவர்களிடம் வாகனத்திற்கான வசதி இருக்கின்றதோ அவர்கள் பள்ளிவாசலுக்கு தினமும் வருவது என்பது சிரமமான விஷயமல்ல. அவர்களால் வர முடியும். வர வேண்டும் என்ற எண்ணம் இருக்குமென்றால் பிறகு அவர்களால் பள்ளிவாசலை நிரப்ப வர முடியும். தொலைதூரத்தில் இருந்தாலும் ஜுமுஆவிற்குக் கண்டிப்பாக வர வேண்டும். இறுதியில் எப்போதாவது அனைவரும் ஒன்றாகி விடுவீர்கள்.

பிறகு வருடத்தில் வருகின்ற பெருநாட்களில், கிராமப்புற மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் இணைந்து தொழ வேண்டும். இதன் மூலம் அறிமுகமும், அன்பும் அதிகரித்து ஒற்றுமை எற்பட வேண்டும். இதே போன்று முழு உலக மக்களும் வாழ்நாளில் ஒரு முறை அதாவது மக்காவின் மைதானத்தில் அனைவரும் ஒன்று கூட வேண்டும் என்று நிர்ணயித்துள்ளான். அதாவது எவர்களுக்கு ஹஜ் செய்வதற்கான வாய்ப்பு இருக்கின்றதோ அவர்கள் ஹஜ்ஜிற்காக செல்ல வேண்டும். ஆக இவ்வாறு அல்லாஹ், ஒருவர் மற்றவரிடம் அன்பு அதிகரிக்க வேண்டும் என்று விரும்புகின்றான்.

அன்னார் எதிரிகள் பற்றி கூறுகின்றார்கள்: ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இஸ்லாத்தின் தத்துவம் எத்தகைய உறுதிவாய்ந்ததாக உள்ளது. உலக ஆட்சியாளர்களின் எந்த கட்டளைகளையும் மனிதன் பேணி நடப்பதில் சோம்பேறியாக

**திருக்குர்ஆனிலிருந்து...**

அநாதைகளின் பொருள்களை அநியாயமாக விழுங்குவோர் நிச்சயமாகத் தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தான் நிரப்பிக் கொள்கின்றனர். நிச்சயமாக அவர்கள் சுடர் விட்டெறியும் நெருப்பில் நுழைவர். (4:11)

Faizal Hameed Ilahi, Tittacherry

இருக்கலாம். ஆனால் இறைவனது கட்டளைகளைப் பேணி நடக்காமல் இருப்பது மற்றும் அதிலிருந்து முகம் திருப்புவது என்பது ஒருபோதும் சாத்தியமற்றதாகும். குறைந்தது பெருநாள் தொழுகையைக் கூட தொழாத எந்த முஸ்லிம்தான் இருப்பார்.

ஆக இந்த அனைத்து ஒன்றுகூடுதலின் பயன் என்னவென்றால், ஒரு ஒளி மற்றவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தி அவருக்கு ஆற்றலை வழங்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 129,130)

ஒருவர் மற்றொருவரைச் சந்திக்கின்றபோது நிச்சயமாக தாக்கம் ஏற்படுகின்றது. இது ஈமானில் மிகவும் பலவீனமானவர்களாக இருப்பவர்களுக்காகவே ஆகும். ஆனால் உண்மையான நம்பிக்கையாளர்கள் ஐவேளை தொழுகைகளுக்காக பள்ளிவாசலுக்கு வர வேண்டும். அல்லாஹ் உங்களுக்குப் பள்ளிவாசலை வழங்கியுள்ளான். ஆக இந்த ஒற்றுமையின் காட்சியையும் நீங்கள் இங்கு வெளிப்படுத்த வேண்டும். நீங்கள் அல்லாஹ்வின் அருளிலிருந்து பயன்பெற்றவாறு இதனை நிரப்ப வேண்டும். பிறகு அல்லாஹ் எவ்வாறு கருணை காட்டுவான் என்பது தொடர்பாக நான் கூறியது போன்று எவர்கள் ஐவேளை தொழுகைக்காக வருகின்றார்களோ அவருக்காக வானவர்களை துஆ செய்ய நியமித்து விடுகின்றான். பிறகு ஜமாஅத்தாக தொழுவதால் அதற்குரிய கூலியாக அல்லாஹ் 27 மடங்கு அதிகமாக வைத்துள்ளான்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் அஸான்.... ஹதீஸ் எண் 645)

எனவே அல்லாஹ்வின் அருள் மற்றும் அவன் நமக்கு வழங்கிய வாய்ப்பிலிருந்து நற்பேற்றை பெற்ற பிறகும் அதனை நாம் கண்ணியப்படுத்தவில்லை என்றால் இது நமது துரதிர்ஷ்டமாகும். ஒவ்வொரு அஹ்மதிக்கும் இது மிகவும் சிந்திப்பதற்குரிய இடமாகும். மேலும் ஒரு முயற்சியுடன் பள்ளிவாசலை நிரப்புவது அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆகவே எனது ஜமாஅத்தை சார்ந்தவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ளும் மக்களே! நீங்கள் உண்மையிலேயே இறையச்சத்தின் வழிகளில் காலெடுத்து வைக்கும் போதுதான் வானத்தில் எனது ஜமாஅத்தை சேர்ந்தவர்களாக கருதப்படுவீர்கள். ஆகவே நீங்கள் உங்களது ஐந்து நேரத்தொழுகைகளை இறைவனைப் பார்ப்பது போல் பயபக்தியுடன் தொழுது வாருங்கள். மேலும் உங்கள் நோன்புகளை இறைவனுக்காக முழு மனதுடன் நிறைவேற்றுங்கள். ஸக்காத் கொடுக்க தகுதியுள்ள ஒவ்வொருவரும் ஸக்காத்து செலுத்துங்கள்.

எவர் மீது ஹஜ் கடமையாக்கப்பட்டிருக்கின்றதோ அவருக்கு எவ்வித தடையும் இல்லையென்றால் ஹஜ் செய்ய வேண்டும். நன்மைகளை அழகுபடுத்தி நிறைவேற்றுங்கள். தீமைகளை வெறுத்து விடுங்கள். தக்வா என்னும் இறையச்சம் இல்லாத எந்தச் செயலும் இறைவனை அடைய முடியாது என்பதை நிச்சயமாக நினைவில் வையுங்கள். ஒவ்வொரு நன்மையின் ஆணிவேரும் தக்வா என்னும் இறையச்சமேயாகும். ஆகவே எச்செயலில் இந்த வேர் வீணாவதில்லையோ அச்செயல் நிச்சயம் வீண் போவதில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: எப்போதாயினும் உங்களுக்கு ஏதேனும் நஷ்டம் உண்டாகுமெனில் அது உங்களது கையால் உண்டான நஷ்டமே அல்லாமல் உங்கள் பகைவர்களின் கைகளால் உண்டானது அல்ல. இறைவன் உங்களுக்கு என்றென்றும் மறைந்து போகாத கௌரவத்தையும் மதிப்பையும் நிச்சயமாக வானத்தில் அளிப்பான். ஆகவே நீங்கள் அவனை ஒருபோதும் விட்டு விடாதீர்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் இறைவனின் இறுதி ஜமாஅத்தாக இருக்கிறீர்கள். எனவே தன் முழுமைத்தன்மையில் உச்ச எல்லையை அடைந்த நற்பணிகளைச் செய்து காட்டுங்கள். உங்களில் சோம்பலுடையவராய் காணப்படும் ஒவ்வொருவரும் ஓர் அசுத்தமான பொருளைப் போல் ஜமாஅத்திலிருந்து புறந்தள்ளப்படுவார். மேலும் அவர் ஏக்கத்துடன் மரணிப்பார். அவரால் இறைவனுக்கு எவ்வித தீங்கும் விளைவிக்க முடியாது. கவனியுங்கள்.

உங்களுடைய இறைவன் உண்மையிலேயே இருக்கிறான் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரும் அவனது படைப்புகளாயிருப்பினும் எவர் இறைவனை தேர்ந்தெடுக்கின்றாரோ அவரையே இறைவனும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். எவர் அவனிடம் செல்வாரோ அவனும் அவரிடம் வந்து விடுகிறான். எவர் அவனை கண்ணியப்படுத்துகின்றாரோ அவனும் அவரை கண்ணியப்படுத்துகின்றான்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)

அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வேதனை மிக்க சொற்களை புரிந்து கொண்டவாறு ஈமானில் முன்னேறுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் இறைவணக்கத்தின் உரிமையை செலுத்துவதற்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக. இறைவனுடன் உயிருள்ள தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் நாம் இந்த பள்ளிவாசலை எப்போதும் நிரப்பக் கூடியவர்களாக விளங்குவோமாக.

இப்போது நான் இந்த பள்ளிவாசல் தொடர்பாக சில விவரங்களையும் எடுத்துக் கூறுகின்றேன். அல்லாஹ்வின் அருளால் சில ஆண்டுகளுக்கு முன் இந்த பள்ளிவாசலுக்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பிறகு அல்லாஹ் இந்த இடத்தை வழங்கினான். இதன் முழு அளவு 2640 மர்பா ஆகும். இதில் முதலில் 15 அறைகளைக் கொண்ட மூன்று தளங்களைக் கொண்ட கட்டடம் இருந்தது. மேலும் ஒரு பெரிய ஹாலும் இருந்தது. இதை வாங்குவதற்காக சில தொகை அழகிய கடனாக தலைமையகத்திலிருந்தும் பெறப்பட்டது.

அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: 50000 யூரோவைத் தவிர மற்ற தொகை செலுத்தப்பட்டு விட்டது. பிறகு கவ்ன்சிலின் சில குற்றச்சாட்டுகள் இருந்தது. அதனை பல்வேறு மீட்டிங்களின் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டது. மேயருடன் மீட்டிங் நடத்தி வரைபடத்தை ஒன்று சேர்த்தார்கள். அல்லாஹ்வின் அருளால் இந்த வரைபடத்திற்கும் ஒப்புதல் கிடைத்தது.

இவர்களது வரைபடத்திற்கேற்ப இவர்களது அறிக்கையின் அடிப்படையில் ஒரு பில்லியன் யூரோ செலவாகும் என்று ஆர்கிடெக்ட் கொடுத்திருந்தார்கள். இந்த தொகையையும் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பிரான்ஸ் முழுமையாக செலுத்துவதாக வாக்குறுதி செய்துள்ளது. தமது பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால்


**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்கள் தந்தையர்கள் மணந்து கொண்ட பெண்களுள் எவரையும் நீங்கள் மணந்து கொள்ளாதீர்கள். (முன்னர்) நடந்தது விட்டது தவிர. நிச்சயமாக இ(ச்செயலான)து கெட்டதும், கோபமூட்டக் கூடியதும், தீய வழக்கமாயும் இருந்தது. (4:23)

A.Shamsul Alam

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

அல்லாஹ்வின் அருளால் இந்த பள்ளிவாசல் ஐந்து லட்சத்து முப்பது ஆயிரம் யூரோவில் முழுமையடைந்து விட்டது. இப்போது வரை குத்தாமுல் அஹ்மதிய்யா சார்பாக மூன்றரை லட்சம் யூரோ கிடைத்துள்ளது. எஞ்சிய தொகையை மற்ற ஜமாஅத்துகள் செலுத்தியுள்ளன.

ஆனால் குத்தாமுல் அஹ்மதிய்யாவைச் சார்ந்தவர்கள், நாங்களே எஞ்சிய தொகையையும் செலுத்துவோம் என்று கூறுகின்றனர். ஆனால் குத்தாமுல் அஹ்மதிய்யாவைச் சேர்ந்தவர்கள் செலுத்தி விட்டனர். எஞ்சிய தொகையை அவர்கள் செலுத்தி விடுவர். ஆனால் எஞ்சிய ஜமாஅத்துகள் ஏன் இதிலிருந்து பாக்கியமற்றவர்களாக இருக்கின்றனர்?

இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டு விட்டதென்றால் பிறகு லஜ்னா மற்றும் அன்ஸார் ஆகிய இருவரும் இணைந்து ஒரு பள்ளிவாசலைக் கட்டுவதற்பான பொறுப்பை ஏற்க வேண்டும். வரக்கூடிய மூன்று ஆண்டுகளுக்குள் இங்கு ஒரு பள்ளிவாசலைக் கட்ட வேண்டும். அதனை அன்ஸார் மற்றும் லஜ்னாவைச் சார்ந்தவர்கள் இணைந்து கட்ட வேண்டும்.

இந்த பள்ளிவாசலுக்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதில் மதிப்பிற்குரிய அஸ்லாம் வதோரி சாஹிப், ஷஹபாஸ் சாஹிப், மற்றும் முஹம்மது ஆஸிம் சாஹிப், மன்ஸூர் சாஹிப் ஆகியோர் பெரும் முயற்சி செய்தனர். அல்லாஹ் இவர்களுக்கு நற்கூலியை வழங்குவானாக.

இந்த பள்ளிவாசலில் 250 நபர்கள் தொழ முடியும். 50 வாகனங்களை பார்க்கிங் செய்வதற்கான இடம் உள்ளது. ஒரு ஜமாஅத் அலுவலகம் உள்ளது. லஜ்னாவிற்கும் அலுவலகம் உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அலுவலகம் இருக்கிறது. இதேபோன்று குளியலறையும் உள்ளது. மிகப்பெரிய ஒரு பார்க்கிங் ஹால் உள்ளது. எமர்ஜென்ஸி ஏற்பட்டால் அதில் 125 நபர்கள் இருக்க முடியும். இதற்கு முன்பு இந்த கட்டிடத்தில் 15 அறைகள் இருந்தன. அதனை சரிசெய்து மீண்டும் இப்போது கட்டப்பட்டுள்ளது. அதுவும் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த பள்ளி ஸ்ட்ராஸ்பெர்க் நகரத்திலிருந்து ஏறக்குறைய 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இதுவொன்றும் தொழுகையாளிகள் வராமல் இருப்பதற்கான மிகப்பெரிய தூரம் ஒன்றும் அல்ல. முரப்பி வீடும் உள்ளது. அதில் 4 அறைகள் உள்ளன. மினாரா வைப்பதற்கான முறையான அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் பள்ளிவாசலின் வலப்பக்கத்தில் 8 மீட்டர் உயரத்தில் ஒரு டூம் வைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அது மிகவும் அழகாக இருக்கின்றது. உள்ளே மெஹ்ராபும் இருக்கிறது.

அல்லாஹ் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. பள்ளிவாசல் கட்டுவதற்கு தியாகங்கள் செய்த அந்த குத்தாம்களின் பொருளிலும் உயிரிலும் பரக்கத் செய்வானாக. வெறும் பள்ளிவாசலுக்கான பொருள் தியாகம் மட்டுமல்ல; பள்ளிவாசலை நிரப்புவதன் ஆன்மாவையும் புரிந்து கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் குத்தாம்களின் இறைவணக்கத்தின் தரமும் அதிகரிக்கட்டுமாக. மேலும் ஜமாஅத் உறுப்பினர்களின் தரமும் அதிகரித்துக் கொண்டே செல்லட்டுமாக.

## காதியான் ஆண்டு மாநாடு தொடர்பான முக்கிய அறிவிப்பு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காதியான் ஆண்டு மாநாடு தொடர்பாக, இது 125 வது ஆண்டு மாநாடு என்று பதர் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் சில குறிப்பான நிகழ்ச்சிகளுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். இது தொடர்பான தகவலை சுற்றறிக்கை மூலமாக ஜமாஅத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் ''தாரீகே அஹ்மதிய்யத்'' காதியான் துறையின் ஆய்வின் அடிப்படையில், **2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்டு மாநாடு 125 வது ஆண்டு மாநாடு அல்ல. மாறாக 126 வது ஆண்டு மாநாடாகும்** என்ற தகவல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் மிகுந்த பரிவுடன் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள்.

(செயல் தலைவர், நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா)

## கணவன் மனைவிக்கு இடையே ஏற்படுகின்ற பிரச்சனைகளில் அதிகமாக பாதிக்கப்படுவது குழந்தைகள்தான்

குடும்பப் பிரச்சனைகள் குழந்தைகளிடமும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பல குழந்தைகள் பிறந்த பிறகு நல்ல முறையில் வாழ்க்கை ஒரு நீண்ட காலம் கழிந்த பிறகு திடீரென்று அந்த ஆணின் மூளையில் ஒரு கிருமி நுழைந்து விடுகின்றது. அப்போது அவர் எனது மனைவியுடன் இனி நான் வாழ முடியாது என்று கூறுகின்றார். எனவே நான் இரண்டாவது திருமணம் செய்யப் போகின்றேன் என்று கூறுகின்றார். அல்லது அந்த மனைவியைப் பார்த்து உனக்கு நான் தலாக் கொடுக்கப் போகின்றேன் என்று கூறுகின்றார். அல்லது ஒரு நீண்ட காலம் கழிந்த பிறகு இந்த நபருடன் நான் எனது வாழ்க்கையை மிகவும் துன்பத்தில் கழித்தேன் என்று மனைவி கூறுகின்றார். இனி என்னால் சகித்துக் கொள்ள முடியாது என்கிறார். எனவே நான் குலா வாங்கப் போகின்றேன் என்று கூறுகின்றார்.

இங்கு நான் இதையும் கூறிக் கொள்கின்றேன். ஜமாஅத்தில் தலாக்குகளை விட குலா பெறுவது அதிகமாக இருக்கின்றது. குலாவிற்கான விண்ணப்பங்கள் கஸா துறையில் அதிகமாக வருகின்றன. எந்நிலையிலும் இத்தகைய நிலைமைகளில் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். விவரம் தெரிந்தவர்களுக்கு உலகத் துறைகளில் கூட இந்த விஷயம் நிரூபிக்கப்பப்பட்டிக்கின்றது என்பது தெரியும். அதாவது பெற்றோர்களை விட்டுப் பிரிந்த பிறகு எவர்களிடம் குழந்தை இருந்தாலும் அந்த குழந்தைகள் மனரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும், ஏனைய தகுதிகளின் அடிப்படையிலும் பாதிப்பிற்கு ஆளாகின்றனர். எந்நிலையிலும் இந்த வேதனை நிறைந்த நிலைமைகளுக்கு எவர் பொறுப்பாளியாக இருந்தாலும் அது இளைஞர்களாக இருந்தாலும் சரியே. இளைஞர்கள் பெண்கள் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

(குத்பா ஜுமுஆ 03.03.2017)

## திருக்குர்ஆனிலிருந்து...

அறியாமையினால் தீமையைச் செய்து விட்டு, உடனே(யே) பாவமன்னிப்புக் கோருகிறவர்களின் பாவமன்னிப்பை மட்டும் ஏற்றுக் கொள்வதே அல்லாஹ்வுக்குக் கடமையாகும். இத்தகையவர்களுக்கு அல்லாஹ் தயவு காட்டுகின்றான். அல்லாஹ் மிக்க அறிபவனும், நுண்ணறிவுடையோனுமாவான். (4:18)

A.Basheer Ahmad, Melapalayam

## காலத்தின் இமாம் கூறுவதை நேரடியாகக் கேளுங்கள். ஒருமுறை குத்பாவை நீங்களே பார்க்க வேண்டும்; கேட்க வேண்டும் என்ற இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் பெல்ஜியம் ஆண்டு மாநாட்டின் போது 1998 ஆம் ஆண்டு மே 3 ஆம் தேதி நிகழ்த்திய தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறுதியாக நான் கூறும் விஷயம், நான் கூறுவதை நேரடியாகக் கேளுங்கள். எந்த மக்களுக்கு இறைவன் நல்வாய்ப்பு வழங்கியுள்ளானோ அவர்கள் ஆன்டனாவைப் பொருத்த வேண்டும். எங்கிருந்து குத்பா கொடுக்கப்பட்டாலும் நேரடியாக அதைக் கேட்க வேண்டும். இதன் மூலம் அவர்களது உள்ளங்களில் தூய மாற்றங்கள் உருவாகும்.

உண்மை என்னவென்றால், பல ஆலிம்களும் உள்ளத்தை ஈர்க்கின்ற தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சொற்பொழிவுகளை நிகழ்த்துகின்றனர். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் காதிற்கு நான் கூறும் விஷயங்களைக் கேட்பது பழகி விட்டது. மேலும் எந்த அளவு நான் கூறும் விஷயங்களை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனரோ அதுபோன்று வேறு எந்த ஆலிம் கூறும் விஷயத்தையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால்தான் நான் உங்களுக்கு போதனை செய்கின்றேன். நான் கூறும் விஷயங்களை நான் முக்கியமானதாகக் கருதுவதால் நீங்களும் இந்த விஷயத்தை முக்கியமானதாகக் கருதுகின்றீர்கள் என்றில்லை.

எனவே, நீங்கள் நேரடியாக இந்த விஷயங்களைக் கேட்டு விட்டு உங்களுக்குள் மாற்றங்கள் ஏற்படுவதையும் நீங்கள் பாருங்கள். நாம் அனுபவம் மூலம் இதை பார்த்துள்ளோம். இங்கிலாந்தில் அதிகமாக அப்படிப்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. குத்பா நம் வரை எட்டி விடுகின்றது. அதில் என்ன அவர்கள் கூறுகின்றார்கள் என்பதை நாம் கேட்டு விடுகின்றோம். முரப்பி சாஹிப் அவர்களும் அதன் சுருக்கத்தை எடுத்துக் கூறி விடுகின்றார்கள். அதுவே போதுமானது என்று அவர்கள் கருதி வந்தனர். ஆனால், இவர்களது வீடுகளில் ஆன்டென்னா பொருத்தப்பட்டு அவர்கள் நேரடியாகக் கேட்க ஆரம்பித்ததும் அவர்கள் முற்றிலுமாக மாறி விட்டனர். மிகவும் அதிகமாக அந்த மக்கள் எங்களுக்கு இப்போதுதான் நாங்கள் அஹ்மதிகளாக ஆகியிருப்பது போன்று தோன்றுகிறது என்று எனக்கு எழுதியுள்ளனர்.

இதுதான் அமெரிக்காவிலும் கனடாவிலும் ஏனைய நாடுகளிலும் வசிப்பவர்களின் நிலையாகும். அவர்கள் இதற்கு முன்னால் வேறு எதையோ புரிந்து வைத்திருந்தனர். ஆனால் எந்த அளவு உழைத்தவாறு நான் உங்களுக்கு தர்பிய்யத் வழங்குகின்றேன். அல்லாஹ்வின் அருளால் திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியில் உள்ள ஞானங்களை நான் உங்களுக்கு எடுத்துக் கூறுகின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேற்கோள்களிலிருந்து ஒவ்வொன்றாகத் தேர்ந்தெடுத்து அதை உங்களுக்கு முன்னால் நான் வைக்கின்றேன். இது என்னால் முடியக்கூடிய பணியாகும். எனக்கு தான் அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றான். ஏனென்றால், என்னை அவன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவராக ஆக்கியுள்ளான். இது அவனது பணியாகும். என்னால் சுயமாக எதையும் செய்ய முடியாது. அவனே எனது குரலில் இந்த அருளை வைத்து விட்டான். அதாவது நீங்கள் அதைக் கேட்க விரும்புகின்றீர்கள். அதை ஏற்றுக் கொள்கின்றீர்கள். எனவே, இதை அனுபவித்துப் பாருங்கள்.

நீங்கள் இருக்கும் இடத்தில் நேரடியாக குத்பா பேருரைகளைக் கேட்பதற்கான தொடர் ஆரம்பமாகி விட்டால் மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் ஏனைய சில ஜமாஅத்துகள் செய்திருப்பது போன்று தனது ஏற்பாட்டின்கீழ் வீடு வீடாக இந்த ஆய்வை செய்ய வேண்டும். அதாவது ஒவ்வொரு அஹ்மதி இளைஞரும், ஆணும், பெண்ணும், முதியவரும் குழந்தைகளும் ஆகிய இவர்கள் எல்லாரும் குறைந்தபட்சம் வாரத்தில் ஒரு முறையாவது *M.T.A* –விலிருந்து பலன்பெற வேண்டும். முழு வாரமும் பலன்பெற வேண்டும் என்று நான் கூறவில்லை. ஒருமுறை பலன் பெற்று விட்டால் முழு வாரமும் அதிலிருந்து பலன்பெற வேண்டும் என்ற ஆர்வம் தாமாகவே அவர்களிடம் ஏற்பட்டு விடும். ஆனால், ஒருமுறை நீங்களே குத்பாவை பார்க்க வேண்டும்; கேட்க வேண்டும் என்ற இந்த விஷயத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(பெல்ஜியம் ஆண்டு மாநாட்டின் போது பெர்லினிலுள்ள பைத்துல் இஸ்லாமிலிருந்து 1998 ஆம் ஆண்டு மே 3 ஆம் தேதி ஆற்றி உரை)

---

*(11வது பக்கத்தின் தொடர்ச்சி…)*

அவை அனைத்தும் வீணாகி விட்டன என்பதேயாகும்.... எனவேதான் நான் குத்தாமுல் அஹ்மதிய்யாவை நிறுவினேன்.

எனவே இந்த அனைத்து நோக்கங்களையும் உங்களது குறிக்கோளாக வையுங்கள். காலத்தின் கலீஃபாவின் வழிகாட்டல், மற்றும் துஆக்களின் மூலமாக உங்களது நிகழ்ச்சிகளை வெற்றிக்குரியதாக ஆக்குங்கள். காலத்தின் கலீஃபாவின் அனைத்துப் போதனைகளின்படியும் செயல்படுங்கள். மேலும் முழுமையான கட்டுப்படுதல் மற்றும் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வின் மிகச்சிறந்த முன்மாதிரியாக ஆகி விடுங்கள். மார்க்கத் தொண்டில் பங்கு பெறுங்கள். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தை தப்லீக் செய்வதிலிருந்து ஒருபோதும் கவனமற்றவர்களாக இருக்காதீர்கள். எல்லா அம்சத்தின் மூலமாகவும், உங்களது மார்க்க, நல்லொழுக்க மற்றும் ஆன்மீக தரத்தை உயர்த்திக் கொண்டே செல்லுங்கள். மேலும் நன்மை மற்றும் ஆன்மீகத்தில் எப்போதும் முன்னேற்றமடைந்து கொண்டே செல்லுங்கள். அல்லாஹ் உங்களை மார்க்க மற்றும் பௌதீக அருட்களுக்கு வாரிசாக்குவானாக. ஆமீன்

வஸ்ஸலாம் எளியவன்

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

### திருக்குர்ஆனிலிருந்து…

உங்களிடத்துக் கருணை காட்டவே அல்லாஹ் விரும்புகின்றான். தீய இச்சைகளைப் பின்பற்றுபவர்களோ, நீங்கள் (தீமையின் பக்கம்) முற்றிலும் சாய்ந்துவிட வேண்டும் என்றே விரும்புகின்றனர். (4:28)

M.Y. Shahul Hameed, Melapalayam

**இன்று இளைஞர்களின் பயிற்சிக்கான காலகட்டமாகும். மேலும் அவர்களின் தர்பிய்யத்திற்கான காலகட்டமாகும். மேலும் பயிற்சியின் காலகட்டமானது மௌனமாக செயல்படக்கூடிய காலகட்டமாக இருக்கின்றது. ஆனால் சமுதாயம் தர்பிய்யத் பெற்று செயல் களத்தில் வெளிவரும்போது பிறகு உலகம் அதன் விளைவைப் பார்க்கின்றது. உண்மையில், ஒரு கையை உயர்த்தும்போது எழுகின்ற, மேலும் ஒரு கையை கீழே போடும்போது அமர்கின்ற அத்தகைய உயிருள்ள சமுதாயத்தின் மூலம் உலகத்தில் வியக்கத்தக்க மாற்றங்களை உருவாக்கி விடுகின்றது**

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் 50 வது தலைமையக தேசிய இஜ்திமாவின் போது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி**

இஸ்லாமாத் (UK) MA 30–07–2019

இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்களுக்கு!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹு

உங்களுக்கு உங்களது 50 வது தலைமையக தேசிய இஜ்திமாவை நடத்துவதற்கான நற்பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த சந்தர்ப்பத்தின்போது வருடாந்திர இஜ்திமாக்கள் தொடர்பான வரலாறு தொடர்பான ஒரு மலர் ஒன்றையும் நீங்கள் வெளியிட விரும்புகின்றீர்கள் என்பதை அறிந்து எனக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. அல்லாஹ் இதனை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. ஆமீன்

மதிப்பிற்குரிய சத்ர் சாஹிப் குத்தாமுல் அஹ்மதிய்யா அவர்கள் இது தொடர்பான தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

எனது தூதுச் செய்தி என்னவென்றால், எந்த நோக்கத்திற்காக மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா நிறுவப்பட்டதோ அதனை நீங்கள் கருத்தில் கொள்ளுங்கள். மேலும் இதன் மூலம் கிலாஃபத்துடன் வலுவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்துங்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1938 ஆம் ஆண்டு காதியானில் ஏற்படுத்திய அஹ்மதி இளைஞர்களின் கிளை அமைப்பே மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆகும். அஹ்மதி இளைஞர்களுக்கு சிறந்த தர்பிய்யத் வழங்கப்பட வேண்டும் என்று அன்னார் விரும்பினார்கள். இதன் மூலம் அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் மிகச்சிறந்த முன்மாதிரியை தமது இருப்பின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும். மேலும் ஒவ்வொரு சந்ததியும் முந்தைய சந்ததிகளின் பிரதிநிதிகளாக திகழ வேண்டும். மேலும் பொருள் தியாகத்தில் முன்னோர்களின் அடிச்சுவட்டில் நடக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று அன்னார் விரும்பினார்கள்.

எனவே அன்னார் இந்த அமைப்பை நிறுவியவாறு கூறினார்கள்: இன்று இளைஞர்களின் பயிற்சிக்கான காலகட்டமாகும். மேலும் அவர்களின் தர்பிய்யத்திற்கான காலகட்டமாகும். மேலும் பயிற்சியின் காலகட்டமானது மௌனமாக செயல்படக்கூடிய காலகட்டமாக இருக்கின்றது. ஆனால் சமுதாயம் தர்பிய்யத் பெற்று செயல் களத்தில் வெளிவரும்போது பிறகு உலகம் அதன் விளைவை பார்க்கின்றது. உண்மையில், ஒரு கையை உயர்த்தும்போது எழுகின்ற, மேலும் ஒரு கையை கீழே போடும்போது அமர்கின்ற அத்தகைய உயருள்ள சமுதாயத்தின் மூலம் உலகத்தில் வியக்கத்தக்க மாற்றங்களை உருவாக்கி விடுகின்றது.

அதேபோன்று மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முதலாவது வருடாந்திர இஜ்திமாவின் சந்தர்ப்பத்தில் அன்னார் வழங்கிய போதனைகளின் சாராம்சம் இதுவே ஆகும். அதாவது சமுதாய முன்னேற்றமானது இளைஞர்களைச் சார்ந்தே இருக்கின்றது. எந்த சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தமது சமுதாயத்தில் தொடர்ந்து இருந்து வருகின்ற தமது மரபிற்கேற்ப முழுமையான முறையில் செயல்பட்டால் பிறகு அத்தகைய சமுதாயங்களால் ஒரு நீண்ட காலமாக உயிரோடு இருக்க முடியும். ஆனால் அந்த விதை பயனற்றதாக இருந்தால் பிறகு அந்த சமுதாயம் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. மாறாக, எந்த முன்னேற்றத்தை அது பெற்றிருந்ததோ அதுவும் வீழ்ச்சியில் மாறி விடும். இது தொடர்பாக ஹுஸூர் அவர்கள், ஜமாஅத் அமைப்பிற்கு முழுமையாக கட்டுப்பட்டு நடக்கவும், குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களின்படி செயல்பட கவனமூட்டினார்கள்.

அன்னார் இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள்: அதாவது அஹ்மதிய்யத் தொடர்பாக உள்ளத்தில் கண்ணியப்படுத்தும் உணர்வை உருவாக்குங்கள். நிலைத்திருக்கும் தன்மையை உருவாக்குங்கள். முயற்சி செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அகப்பார்வையை உருவாக்கிக் கொள்ளுங்கள். தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விஷயங்களை அறிந்து கொள்ளுங்கள். படைப்பின தொண்டில் பங்கு பெறுங்கள். உண்மையை மேற்கொள்ள வேண்டும். தமது நோக்கத்தை எப்போதும் உங்கள் முன்பு வைத்திருக்க வேண்டும். உங்களது பணிகளின் முடிவிற்கு உங்களை நீங்களே பொறுப்பாளியாக்க வேண்டும். ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டால் அதற்கான தண்டனையைப் பொறுத்துக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். எந்த நபர் சமுதாயத்திற்காக தம்மை மாய்த்துக் கொள்கின்றாரோ அவர் மாய்வதில்லை. சமுதாயத்தின் வாழ்வை நிலைநாட்டுவதற்கு எதிரில் தனிப்பட்ட தியாகங்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் கொண்டிருப்பதில்லை. உங்களை மட்டும் சீர்திருத்திக் கொள்ளாமல் சுற்றுப் புறத்தையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும். கட்டுப்படுதலின் தன்மையை தம்மிடத்தில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஜமாஅத்தின் அடி எப்போதும் முன்னேற்றத்தின் பக்கமே செல்ல வேண்டும் என்பதை எப்போதும் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது என்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் இந்த கூற்றை நீங்கள் மீண்டும் மீண்டும் செவியுற்றுள்ளீர்கள். எனவேதான் அன்னார் இளைஞர்களின் சீர்திருத்தத்தின் பக்கம் குறிப்பான கவனம் செலுத்தி வந்தார்கள்.

ஒரு குத்பா ஜுமுஆவில் அன்னார் கூறினார்கள்: சமுதாயங்கள் சீர்திருந்துவதற்கு ஒரு சந்ததி மட்டும் சரியாவது போதுமானதல்ல. எந்த திட்டங்கள் நீண்டதாக இருக்கின்றதோ, அதனை தொடர்ந்து பல சந்ததிகள் முழுமை செய்வதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கும்போதுதான் அத்தகைய திட்டங்கள் வெற்றி பெற முடியும். அதனை முழுமை செய்வதற்காக எந்த அளவுக்கு நேரத்தின் தேவை உள்ளதோ, அந்த அளவுக்கு நேரம் வழங்கப்படவில்லை என்றால் பிறகு அது எவ்வகையிலும் வெற்றி பெற முடியாது என்பது வெளிப்படையான ஒன்றாகும். அது முழுமை பெறவில்லை என்றால் பிறகு அதன் பொருள், முன்னோர்கள் இந்த திட்டங்களை முழுமை செய்வதற்காக என்ன முயற்சிகள் மற்றும் தியாகங்கள் செய்தார்களோ

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

## திருக்குர்ஆனிலிருந்து...

உங்களுக்குத் தடுக்கப்பட்ட பெரும் பாவத்திலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால், நாம் உங்களின் (சிறு) குறைபாடுகளை, உங்களை விட்டு அகற்றி விடுவோம். மேலும் பெருங்கண்ணியத்திற்குரிய இடத்தில் உங்களை நுழையச் செய்வோம். (4:32)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 14 November 2019 Issue No. 46

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## சிலுவைக் கொள்கைளை துண்டு துண்டாக ஆக்குவதற்காகவே இந்த எளியவன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது பெயரில் அனுப்பப்பட்டுள்ளேன்

இந்த எளியவனுக்கு மற்ற சான்றோர்களின் இயல்புடன் ஒப்புமை இருக்கின்றது. இதைப் பற்றிய விளக்கத்தை பராஹீனே அஹ்மதிய்யாவில் நான் விரிவாக எழுதியுள்ளேன். இதைத் தவிர ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய இயல்புடனும் எனக்கு ஒரு குறிப்பான ஒப்புமை இருக்கின்றது. இந்த இயல்பிலுள்ள ஒப்புமையின் காரணமாக சிலுவைக் கொள்கையை துண்டு துண்டாக ஆக்குவதற்காகவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது பெயரில் இந்த எளியவன் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நான் சிலுவையை முறிப்பதற்காகவும், பன்றிகளை கொல்வதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். நான் விண்ணிலிருந்து எனது வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் இருக்கின்ற அந்த தூய வானவர்களுடன் இறங்கியுள்ளேன். அவர்களை என்னுடன் இருக்கும் என் இறைவன் எனது பணியை பூர்த்தி செய்வதற்காக தயாராக இருக்கின்ற ஒவ்வொரு உள்ளத்திலும் நுழையச் செய்வான். இன்னும் சொல்வதென்றால் அவன் அவ்வாறு செய்து கொண்டிருக்கின்றான். நான் அமைதியாக இருந்தாலும் எனது பேனா எழுதுவதிலிருந்து நின்று விட்டாலும் அப்போதும் கூட என்னுடன் இறங்கி இருக்கின்ற அந்த மலக்குகள் தமது பணியை செய்வதை நிறுத்தி விட மாட்டார்கள். அவர்களது கைகளில் பெரும் பெரும் கோடாரிகள் இருக்கின்றன. அவை சிலுவையை உடைத்தெறிவதற்கும், படைப்பினங்கள் வணங்கப்படுகின்ற ஆலயங்களை தகர்ப்பதற்கும் அவர்களுக்கு தரப்பட்டிருக்கின்றது.

(ஃபத்ஹே இஸ்லாம் பக்கம் 11 அடிக்குறிப்பு ரூஹானி கஸாயின் தொகுதி 3)

## எப்போதிருந்து இறைவன் என்னை இவ்வுலகில் நியமித்து அனுப்பி இருக்கின்றானோ அந்த சமயத்திலிருந்தே உலகில் ஒரு மகத்தான புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

எந்த பணிக்காக என்னை நியமித்துள்ளானோ அந்த பணி இதுவாகும். அதாவது இறைவனுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையிலுள்ள உறவில் ஏற்பட்டுள்ள மாசை அகற்றி அன்பு மற்றும் கலப்பற்ற மனத்தூய்மையுடன் கூடிய தொடர்பை மீண்டும் நிலைநாட்டி உண்மையை வெளிப்படுத்திக் காட்டுவதன் மூலமாக மார்க்கப் போர்களை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்திற்கு அடித்தளத்தை அமைப்பதற்கு நான் வந்துள்ளேன். உலகின் பார்வையை விட்டும் மறைந்து போய்விட்ட அந்த மார்க்க உண்மைகளை அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவும் மன இச்சைகளின் இருள்களின் கீழ் அமுங்கி கிடக்கின்ற அந்த ஆன்மீகத்திற்கான முன்மாதிரியை காட்டுவதற்காகவும் மனிதனுக்குள் நுழைந்து கவனம் மற்றும் துஆவின் மூலமாக வெளிப்படுகின்ற இறைவனின் ஆற்றல்களை வெறும் சொல்லால் மட்டுமல்லாமல் அனுபவத்தின் மூலமாக அவற்றின் நிலைமையை எடுத்துக் கூறுவதற்காகவும் எல்லாவற்றையும விட அதிகமாக எல்லா வகையான இணை வைத்தலின் ஊடுருவல்களிலிருந்து காலியாக இருக்கின்ற இப்போது அழிந்து போய்விட்ட அந்த கலப்பற்ற ஒளி வீசுகின்ற ஓர் இறைமையின் நிரந்தமான செடியை மீண்டும் சமுதாயத்தில் நடுவதற்காகவே நான் வந்துள்ளேன். இவை அனைத்தும் எனது ஆற்றலினால் நடைபெறாது. மாறாக, விண்ணிற்கும் மண்ணிற்கும் இறைவனாக இருக்கின்ற அந்த இறைவினின் ஆற்றலினாலேயே இது நடைபெறும்.

ஒருபுறம் இறைவன் தனது கைகளால் எனக்கு பயிற்சியளித்து எனக்கு அவனது வஹியை பெறுகின்ற நற்பேற்றை வழங்கி எனது உள்ளத்தில் எத்தகைய உணர்வை ஏற்படுத்தியுள்ளான் என்றால் இதுபோன்ற சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்காக அவன் என்னை நிறுத்தியிருப்பதை நான் பார்க்கின்றேன். மறுபக்கம் நான் கூறுபவற்றை கேட்பதற்கு தயாராக இருக்கின்ற உள்ளங்களை அவன் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பதையும் நான் காண்கின்றேன். எப்போதிருந்து இறைவன் என்னை இவ்வுலகில் இப்பணிக்காக நியமித்து அனுப்பி இருக்கின்றானோ அந்த சமயத்திலிருந்தே உலகில் ஒரு மகத்தான புரட்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் எந்த மக்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இறைதன்மை இருப்பதாக ஏற்றுக் கொண்டார்களோ இப்போது அவர்களில் இவ்விஷயத்தை பற்றி ஆராய்பவர்கள் இந்த கொள்கையிலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

தமது மூதாதையர்களின் காலத்திலிருந்து சிலைகளிடத்திலும் தேவதைகளிடத்திலும் தமது உள்ளத்தை பறிகொடுத்த பலருக்கும் சிலை என்பது ஒன்றுமே அல்ல என்ற இந்த விஷயம் புரிந்து விட்டது.  ஆனால் எந்த மக்கள் ஆன்மீகத்தைப் பற்றி அறியாதவர்களாகவும் சடங்கு என்ற முறையில் சில சொற்களை மட்டும் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்கள் ஆயிரக்கணக்கான வீணான சடங்குகளையும் மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுகின்றவற்றையும் தமது கழுத்திலிருந்து இறக்கி வைத்து விட்டனர் என்பதிலும் அவர்கள் ஓர் இறைமையின் நுழைவாயிலுக்கு அருகில் நிற்கின்றனர் என்பதிலும் சிறிதளவு கூட சந்தேகம் இல்லை. சிறிது காலத்திற்குப் பிறகு இறைவனின் அருளானது இவர்களில் பலரையும் தனது ஒரு குறிப்பான கையின் மூலமாக தள்ளிக் கொண்டு வந்து உண்மையான முழுமையான ஓர் இறைமையின் இந்த அமைதியின் வீட்டில் அவர்களை நுழையச் செய்துவிடும். அத்துடன் முழுமையான நேசமும், முழுமையான அச்சமும், முழுமையான இறை ஞானமும் அவர்களுக்கு வழங்கப்படும்.

இந்த எனது எதிர்பார்ப்பு கற்பனையானது அல்ல. மாறாக, இறைவனின் தூய வஹியின் மூலமாக இந்த நற்செய்தி எனக்கு கிடைத்திருக்கின்றது. இறைவனின் ஞானமானது இந்த நாட்டில் இந்த பணியை செய்துள்ளது. அதன் மூலமாக பல்வேறு சமுதாயங்களை அவன் ஒரே சமுதாயமாக ஆக்கப் போகின்றான். மேலும் சமாதானம் மற்றும் சாந்தியின் நாட்களை அவன் கொண்டு வர இருக்கின்றான். ஒவ்வொருவருக்கும் அந்த காற்றின் மனம் வந்து கொண்டிருக்கின்றது. அதாவது இந்த பல்வேறு பிரிவுகள் அனைத்தும் ஏதாவதொரு நாளில் ஒரே சமுதாயமாக ஆக இருக்கின்றது. (லெக்சர் லாஹூர் பக்கம் 181 ரூஹானி கஸாயின் தொகுதி 20)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad